2002 ஏப்ரல் 22] [பேராசிரியர் க. அன்பழகன்]

அதற்கு ஏற்படுகிற முக்கியத்துவத்தின் அடிப்படையில் அவ்வாறு பேசப்பட்டது தவறு அல்ல. இந்த எண்ணம் குறித்து இங்கே பேசிய திரு. சந்தானம் அவர்கள்கூட குறிப்பிடுகிறபோது பல ஆண்டுகளாக அப்படி ஓர் எண்ணம் இருந்தது என்றார். அதுபோல இன்றைய முதலமைச்சருடைய மனதிலே அந்த எண்ணம் இருந்தது, அதற்கு ஒரு வடிவம் தந்து இருக்கலாம். ஆனால் பல்கலைக்கழகத் தொடக்கம் என்ற அடிப்படையில் குடியரசுத் தலைவரே வந்து, அதுவும் டாக்டர் அம்பேத்கர் பெயர் வைத்து அந்தப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட காரணத்தால் அப்படித் தொடங்கியதாக ஒரு கருத்து பெறப்பட்டது. கருத்து மாறுபாடு இருக்கலாம்; ஒருவேளை இன்றைய முதல்வர் நான்தான் தொடங்கினேன் என்று சொல்லலாம்; அன்றைய முதல்வர், தான் தொடங்கியதற்கான காரணத்தைச் சொல்லலாம். அதற்காக தனது ஆங்கிலம் விளங்காதது காரணமாக அவர் சொன்னார் என்று சொல்வது, முறையாகத் தெரியவில்லை. ஏனென்றால் இங்கு முதலமைச்சராக இருந்த பெருமக்கள் பலர் ஆங்கிலத்திலே தேர்ச்சி பெறாதவர்கள். ஆனால் ஆங்கிலத்தைப் புரிந்துகொள்ளக்கூடிய ஆற்றல் உள்ளவர்களாகத்தான் இருந்திருக்கிறார்கள். அவர்களுடைய பெயரைச் சொல்வது, இந்த அவையிலே அவர்களை குறைவுபடுத்துவதாக ஆகிவிடும் என்ற காரணத்தால் நான் சொல்லவில்லை. அப்படி ஒரு கருத்தை இன்றைய முதலமைச்சர் பேசுவது 14 ஆண்டு காலம் முதலமைச்சராக இருந்த ஒருவருக்கு அம்மையாருடைய ஆங்கிலப் பேச்சு புரியவில்லை என்றால் ஒருவேளை அம்மையாருடைய ஆங்கிலம் அவ்வளவு சிறந்தது என்ற காரணத்தால் புரியாமல் இருக்கலாம். ஆனால் அப்படிச் சொல்வது மூலம் இந்த அவையில் ஒரு கருத்தை மறுப்பதற்காக முன்னாள் முதல்வருடைய தகுதியைக் குறைத்துச் சொல்வதற்கு நியாயம் இல்லை என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

முற்பகல் 11-20

(ஆ) வேலூர் மாவட்டம், தேசிய நெடுஞ்சாலையில் நான்கு வழிப் பாதைச் சாலையை இடித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பல நாட்களுக்கு முன்பாகத் தங்களிடம் என்னுடைய வேலூர் மாவட்டத்தில் தேசிய நெடுஞ்சாலை 4 வழிப் பாதையிலே, ரோடை இடிப்பதற்காக ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) என்னுடைய அறைக்கு வந்து பேசுங்கள். நீங்கள் இன்றைக்கு ஒரு நாள்தான் என்னுடைய அறைக்கு வரவில்லை. நாளைக்கு வாருங்கள். பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடு) திரு. பரிதி இளம்வழுதி.

(இ) சென்னை, எழும்பூர் தொகுதி, கொள்ளைச் சம்பவம்.

திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே 4, 5 நாட்களுக்கு முன்பு நடைபெற்ற ஒரு கொள்ளைச் சம்பவம் குறித்து ... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. என்னுடைய அறைக்கு வந்து பேசுங்கள். (குறுக்கீடு) திரு. மீ.அ. வைதியலிங்கம், என்ன சொல்லுங்கள்.

(ஈ) தாம்பரம் தொகுதி, தொடர் கொள்ளைச் சம்பவம்.

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே நடைபெற்ற தொடர் கொள்ளைச் சம்பவம் குறித்து தங்களிடத்திலே கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்து இருக்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானம் தந்து இருக்கிறேன். பத்து நாட்களாகிறது, கவன ஈர்ப்பு அறிவிப்பு தந்து. இதுவரை அதை எடுத்துக்கொள்ளவில்லை.

3. கவன ஈர்ப்பு

விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தின் செயல்பாடுகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. அ. அசோகன், திரு. எ.வ. வேலு, திரு. தி. வேல்முருகன், திரு. ப. அரசன், திரு. ஜி.கே. மணி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வருவார். திரு. எ.வ. வேலு.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயத் தொழிலாளர் நலன் கருதி சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டு இயங்கி வந்த நல வாரியத்தின் செயல்பாடுகள் தொடர்ந்து இயங்கக்